**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. No. 166 /2022 PW1**

12.03.2025 **வா..சா.1.. பாக்கியலட்சுமி சத்திய வாக்குமூலத்தின் பேரில் 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி -**

நடராஜன், நீலகவுண்டரிடம் சென்று சொத்தை ஏன் எழுதி வைக்கவில்லை என கேட்டாரா என்றால் இல்லை. 5.11.2007ல் ராஜகுமார் என்பவருக்கு நீலகவுண்டர் தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த தான செட்டில் மெண்ட் பத்திரத்தை நீலகவுண்டர் 28.12.2007ல் ரத்து செய்து விட்டார் என்றால் எனக்கு தெரியாது. 03.01.2008ல் நீலகவுண்டர் மீண்டும் சீனுவாசன் மற்றும் செல்வகுமாருக்கு ஒரு தான செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் எனக்கு தெரியாது. 03.01.2008ல் எழுதப்பட்ட தான செட்டில்மெண்ட் படி சொத்தின் சுவாதீனத்தையும், நீலகவுண்டர் 3, 4 பிரதிவாதிகளிடம் ஒப்படைத்து விட்டார் என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்திற்கான பட்டா எனது கணவரின் முதல் மனைவியின் மகன் பூவையா பெயரில் உள்ளது. பூவையா பெயரில் உள்ள பட்டாவை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு பட்டாவை தாக்கல் செய்யவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 3, 4 பிரதிவாதிகள் தங்கள் பெயரில் வழக்கு சொத்தின் பட்டாவை (பட்டா எண் 1716) பெயர் மாற்றம் செய்து கொண்டு இன்றளவும் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை சொர்ணலட்சுமிக்கு 3ல் 1 பாகமும், 3, 4 பிரதிவாதிகளுக்கு கூட்டாக 3ல் 1 பாகமும், நீலகவுண்டருக்கு 3ல் 1 பாகமும் உரிமையானது என்று சொன்னால் சரியல்ல. நீலகவுண்டர் இறந்து விட்டார். தெய்வானை நீலகவுண்டரின் மனைவி என்றால் சரிதான். நீலகவுண்டருக்கு 3 பிள்ளைகள் என்றால் சரிதான். நீலகவுண்டருக்கு உரிமையான வழக்கு சொத்தின் 1/3 பாகத்தை பொருத்து எந்த ஒரு ஆவணமும் எழுதி வைக்காமல் இறந்து விட்டார் என்றால் சரியல்ல. நீலகவுண்டருக்கு உரிமையான பாகமானது அவரது மனைவி மற்றும் 3 பிள்ளைகளுக்கு உரியது என்றால் சரியல்ல. எனது அம்மாவின் சொந்த ஊர் மேல்நெமிலி கிராமம் ஆகும். நான் தற்போது சேத்பட்டில் வசிக்கிறேன் என்றால் சரிதான். வாடகை வீட்டில் வசிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வழக்கு சொத்தில் குடியிருக்கவில்லை என்றும், தனியாக வாடகை வீட்டில் வசிக்கிறேன் என்றால் சரியல்ல. 3, 4 பிரதிவாதிகளுக்கு நீலகவுண்டர் எழுதிக் கொடுத்த தான செட்டில்மெண்டை மறைத்து விட்டு ரத்து செய்யப்பட்ட தான செட்டில்மெண்ட் அடிப்படையில் இந்த வழக்கை தாக்கல் செய்து வழக்கு சொத்தில் உரிமை கோருகிறேன்

என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை பூவையா, மோகன், கிருஷ்ணமூர்த்தி மற்றும் நான் எந்த காலத்திலும் கூட்டாக அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல. பூவையா, மோகன், கிருஷ்ணமூர்த்தி ஆகியோருக்கு வழக்கு சொத்தில் எந்த உரிமையும் இல்லை என தெரிந்ததால் தான் என்னுடன் சேர்ந்து அவர்கள் இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்சொன்ன பூவையா, மோகன், கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் இந்த வழக்கிற்கு அவசிய தரப்பினர் என்றும், அவர்களை தரப்பினராக சேர்க்காத காரணத்தால் இந்த வழக்கானது தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. எனக்கும் ரங்கநாதனுக்கு பிறந்தவர்கள் 1மகன், 1 மகள் ஆவார்கள். 1 மகன் திருமணம் ஆகாமல் இறந்து விட்டார். எனது மகள் பெயர் மகேஸ்வரி. என் மகள் மகேஸ்வரிக்கு சொத்தில் பங்கு வேண்டும் என்பதற்காக பொய்யான காரணங்கள் சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கூட்டு உரிமையாளர்களான பூவையா, மோகன், கிருஷ்ணமூர்த்தி ஆகியோரின் அனுமதியின்றி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் தள்ளுபடிக்கு உரியது என்றால் சரியல்ல. ராஜ்குமார், சொர்ணலட்சுமி, சீனுவாசன், செல்வகுமார் ஆகியோர் 2022ல் வழக்கு சொத்தை நான் உபயோகிப்பதில் இருந்து தடை செய்தார்கள். வீட்டை விட்டு போகச் சொல்லி சொன்னார்கள். அது குறித்து போலீசில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். நான் சொல்வது போல் அவர்கள் தடுக்கவில்லை என்றும், அவர்கள் தான் வழக்கு சொத்தில் குடியிருக்கிறார்கள் என்றும், அதனால் தான் நான் போலீசில் அவர்கள் மீது புகார் ஏதும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கறிஞர் அறிவிப்பு கொடுக்காமல் கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் தாக்கல் செய்த ஆவணங்கள் என்னால் ஜோடிக்கப்பட்டவை என்றால் சரியல்ல. இந்த வழக்கானது பிரதிவாதிகளுக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
**திருவண்ணாமலை.**